பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 19 திங்கட்கிழமை (01-02-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 66

# ...னியில் ராணுவ நடவடிக்கை
# ...00 ஆயுதப்படையினர் களத்தில்!

## ...பமடுவை ஆக்கிரமிக்க ...ப்புகள் பெரு முயற்சி

கொழும்பு, பெப்ரவரி 1

...இல், வன்னிப் பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை ...லங்காப் படையினர் ஆரம்பித்துள்ளனர். இந்நடவடிக்கை ...ம் துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

...ழும்பில் படை வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

...ட்டம் நேற் ...மணி முதல் ...போதிலும், காலை சுமார் 5 மணியள விலேயே வவுனியா பம்பை மடுக் கிராமத்தை ஆக்கிர மிக்கும் முயற்சியில் படையி யினர் ஈடுபட்டனர் என்று

(5ஆம் பக்கம் பார்க்க)

## ...ர்ந்த வன்னிக் காடுகளில் அழிக்கும் நடவடிக்கையாம்

...ம்பு' பெப். 1 ...களான வவு ...மற்றும் முல் ...வட்டங்களில் ...ளுக்கு எதி ...குதலை ஆயு ... தற்போது ...னர்.

கூட்டுப்படை வட்டாரங் களை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி இவ் வாறு அறிவித்தது.

பெரும்பாலும் அட ந்த காடாக இருக்கும் இப்பிர தேசங்களில் விடுதலைப் புலி களைத் தேடி அழிப்பதே இத் தாக்குதலின் நோக்கம் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

படையினர் முகாம்களில் இருந்து வெளியேறி மீட்கப் படாத பகுதிகளை தம்வசம் கொண்டு வரும் முயற்சியில்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## ...த்தை நிறுத்த பிரேமாவிடம் ...ல் கோருவார் மன்னார் ஆயர்

...ம், பெப். 1 ...ஒரு பகுதியில் ...த்தம், முழு ... பாதிக்கும். ...டித்து வரும் ...த்தி சமாதா ... இங்கு உரு ... ...ம் ஜனாதி ...சந்தித்துக் கேட்கவுள்ளதாக இப்போது யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி. வண. இராயப்பு ஜோசப் உதயனுக்குத் தெரி வித்தார்.

கிளாலியூடாக நேற்று முன் தினம் இரவு யாழ். வந்த டைந்த மன்னார் ஆயர் எதிர் வரும் 8 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார்.

அவர் இங்கு தங்கியிருக்கும் போது யாழ். மறை மாவட் டத்தின் பங்குகளில் நடை பெறும் சமய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி இங் கிருந்து புறப்பட்டுச் செல்லும் அவர் எதிர்வரும் பதினொ

( 2-ஆம் பக்கம் பார்க்க)

## ...னார் மறைமாவட்டத்தில் ...தவீத மக்கள் அகதிகள்

### ...டை வசதி எதுவும் இல்லை

...ணம், பெப் 1 ...வுனியா ஆகிய ...உள்ளடக்கிய ... மாவட்டத் ...யான மக்கள் ...ள்ளனர். உண ...ள் ஓரளவு ...ம் ஏனைய ...திகள் எதுவும் ...வே அந்த மக் கள் உள்ளனர்''

மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வண. இராயப்பு ஜோசப் இவ்வாறு தெரிவித் தார்.

இராணுவத்தினரின் கட்டுப் பாட்டில் உள்ள மன்னார்த் தீவில் சுமார் 600 குடும்பத் தினரே வாழ்கிறார்கள். கிரா மங்களில் உள்ள வீடுகள் அனைத்தும் தரைமட்டமாக் கப்பட்டுள்ளன.—

போக்குவரத்து அங்கு பெரும் பிரச்சினையாக உள் ளது. பாதைகளைத் திருத் தவோ கட்டடங்களை அமைக் கவோ தேவையான பொருள் கள் அங்கு இல்லை.—

தாழ்வுபாடு — கற்பிட்டி படகுச் சேவை வாரத்தில் மூன்று நாட்கள் நடைபெறு

(5ஆம் பக்கம் பார்க்க)

## ...வட்டத்திலுள்ள ...திய ம. வித்தியாலயங்கள் ...வும் தரம் உயர்த்தப்படும்

### ...ய பாடசாலைக்கான வசதிகள் கிடைக்கும்

...ணம், பெப் 1 ...ட்டத்தில் ...மத்திய மகா ...ங்கள் தரம் ...ள்ளன. தேசிய ... போன்று ...தே வசதிகள் ...டுக்கப்படவுள் ளன.

யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தர லிங்கம் இத்தகவலை தெரி வித்தார்.

இதுகுறித்து கல்வி அமைச் சுக்கு தாம் சமர்ப்பித்த திட் டத்துக்கு அனுமதி கிடைத் துள்ளதாகவும் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இத்திட்டம் குறித்து பணிப் பாளர் விளக்கியதாவது:-

o யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து மத்திய மகாவித் தியாலய[illegible]

(6 [illegible])

## பிரேமாவை சந்திக்க எதிரணி மறுப்பு

கொழும்பு, பெப். 1

பொது விவாதம் நடத்து வது பற்றிய இறுதி ஏற்பாடு களை மேற்கொள்ளுவதற்காக தம்மைச் சந்திக்கும்படி ஜனாதிபதி பிரேமதாஸா விடுத்த அழைப்பை ஏற்ப தில்லை என்று சுதந்திரக்கட்சி தலைமையிலான எதிர்க்கட்சி களின் கூட்டணி முடிவு செய் திருப்பதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (உ-எ)

## எம்.எல்.ஏ. உட்பட பத்துப் பேர் கடத்தப்பட்டனர்

சென்னை, பெப். 1

ஆந்திர மாநிலம் — விசாகப் பட்டினம் மாவட்டத்தில் கொளுர் என்னும் இடத்துக்கு அருகே காங்கிரஸ் எம். எல். ஏ. பசுபுலேடி பலராஜுவும் மாநில அரசு அதிகாரிகள் ஒன்பது பேரும் தடைசெய்யப் பட்ட மக்கள் போர்க்குழு இயக்கத்தினரால் கடந்த சனிக்கிழமை கடத்திச் செல் லப்பட்டனர்.

பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு திரும் பிக் கொண்டிருந்தபோது ஆயு

(5ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய கல்லூரியாக திருமலை இந்து

கொழும்பு, பெப். 1

திருகோணமலை இராம கிருஷ்ண மிஷன் இந்துக் கல் லூரி தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்படும்.

நேற்று திருமலையில் முடி வடைந்த ஜனாதிபதி செய லக இடம்பெயர் சேவையின் போது. கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. ஆர். ஆர். எஸ். அலஸ் இது தொடர்பான அறிவிப்பை விடுத்தார். (உ)

## முச்சந்தி முரளி



அப்பா... வாதம் தொடங்க [illegible] வாங்கினம்போலை...!

## லண்டனில் பேரணி

லண்டன், பெப். 1

பிரிட்டனில் இந்துக் கோயில் கள் தாக்கப்பட்டதை ஆட் சேபித்து நேற்று லண்டனில் சுமார் ஐயாயிரம் இந்துக்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர். பேரணி யின் முடிவில் இந்தியத் தூதர கத்திலும், பிரிட்டிஷ் பிரதமர் அலுவலகத்திலும் மகஜர்கள் ஒப்படைக்கப்பட்டன. (உ)

## கொழும்பு - வவுனியா ரயில் தடம் புரண்டது பலர் காயம்!!

கொழும்பு, பெப். 1

கொழும்பு - கோட்டையில் இருந்து கடந்த சனிக்கிழமை காலை வவுனியாவுக்கு சென்ற ரயில் மாகோவுக்கும் நாகொல்லாகமவுக்கும் இடையே தடம்புரண்டது.

இதில் பயணம் செய்தவர் களில் 17 பேர் காயமடைந் தனர். அவர்கள் அனைவரும் குருநாகல் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். இவர்களில் ஏழுபேர் ஆபத்தான நிலையில் இருப் பதாக தெரிவிக்கப்பட்டது.

எட்டு சரக்குப் பெட்டி களும், நான்கு பயணிகள் பெட்டிகளும் தடம்புரண் டன. ரயில் பாதையும் பலத்த சேதத்துக்குள்ளான தாக தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## பொருள்களுடன் 'குமண' புதனன்று வந்து சேரும்

யாழ்ப்பாணம், பெப். 1

உணவு மற்றும் அத்தியா வசியப் பொருள்களுடன் ''குமண'' கப்பல் நாளை மறு தினம் புதன்கிழமையன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்குத் தகவல் கிடைத்தது.

உணவுப் பொருள்கள், மருந் துப் பொருள்கள், தபால்கள், பாடசாலை மாணவர்களுக் கான இரண்டாவது தொகுதி தளபாடங்கள் ஆகியவற்று டன் ''குமண'' கப்பல் இன்று காலை கொழும்பில் இருந்து புறப்படும் என்றும் -

அது நாளை மறுதினம் பருத் தித்துறையை வந்தடையும் எனவும் நேற்று மாலை கொழும்பில் இருந்து தகவல்

( 5 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் தப்பிய 9 ஊழியர்களை ஸ்ரீலங்கா ரகசிய பொலீஸார் விசாரணை நடத்துவர்

வங்கக் கடலில் எரிந்து மூழ் கிய விடுதலைப் புலிகளின் கப் பலில் இருந்து தப்பிய கப்பல் ஊழியர்கள் ஒன்பது பேரையும் விசாரணை செய்வதற்காக, கொழும்பில் இரகசியபொலீஸ் குழு ஒன்று விரைவில் இந்தி யாவுக்குச் செல்லவுள்ளது.

இந்த ஒன்பது பேரும் தற் சமயம் விசாகப்பட்டினத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

இவர்களை இந்திய மத்திய புலனாய்வுக் குழுவினர் (சி.பி. ஐ.) விசாரிக்கவுள்ளனர் என்று ஏற்கனவே செய்திகள் வெளி யாகி இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

## மூன்று மாதப் பயிற்சி சகல ஆசிரியர்களுக்கும்

### யாழ். கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ் மாவட்டத்தில் கட மையாற்றும் சகல ஆசிரியர் களுக்கும் மூன்று மாதப் பயிற்சி அளிக்கப்படவிருக் கிறது.

யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

யாழ். மாவட்ட பாட சாலை மாணவர்களின் கல் வித் தரத்தை அதிகரிப்பதற் காக ஆசிரியர்களுக்கு கூடுதல் பயிற்சி அளிக்க வேண்டும் என்று தாம் கல்வி அமைச் சைக் கேட்டிருந்ததாகவும்—

அதன்படி பயிற்சித் திட் டத்தை நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ள தாகவும் பணிப்பாளர் தெரி வித்தார்.

யாழ் மாவட்டத்தில் அறி முகப்படுத்தப்பட்டு வரும் புதிய பாடத்திட்டங்களுக்கு ஏற்ப ஆசிரியர்களைத் தயார் செய்யும் வகையில் இந்தப் பயிற்சித்திட்டம் அமைய விருக்கிறது என்றும்—

உடனடியாக இத்திட்டம் அமுலுக்கு வந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ஒ 3)

## தொழில் பதிவுச் சான்றிதழ் நாளை முதல் பெறலாம்

யாழ்ப்பாணம், பெப் 1

உடுவில், சங்கானை, தெல் லிப்பழை ஆகிய உதவி அர சாங்க அதிபர் பிரிவுகளில் வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளைப் பதிவு செய்ய விண்ணப்பித்தவர்கள் தமது பதிவுச் சான்றிதழ்களை கந் தர்மடத்தில் உள்ள விடுத லைப் புலிகள் வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் பெற் றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பின்வரும் நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசாக கிருகயக்கு அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் ஆங்கிரச ஸு தை மீ 10ஆம் நாள் (23 - 01 - 19-3) சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தகப்பனார் தெல்லிப்பழையைச் சேர்ந்த

**சிவஸ்ரீ வை. சதாசிவக் குருக்கள்**

அவர்களது

**அந்திமக் கிரியைகள்**

பின்வரும் தினங்களில் நடைபெறும்

தசாகம் (கல்லெடுப்பு) — 01-02-93 திங்கட்கிழமை
ஏகோதிஷ்ட் மாசியம் — 02-02-93 செவ்வாய்க்கிழமை
சபிண்டீகரணம் — 03 02-93 புதன்கிழமை
கிருகயக்ஞம் — 04-02-93 வியாழக்கிழமை

ஷ்டி கிரியைகளில் தங்களையும் பங்கு'ற்றும்படி அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

பருத்திப்பிள்ளையார் கோவிலடி,
இணுவில்.

(24742)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

பிரிவு 2

**DAY CLASSES**

செவ். வியா. — 8 மணி-மாலை 2மணி வரை
சனி, ஞாயிறு — 8 மணி-பகல் 12மணி வரை

**ஆரம்பம்: 04 02 - 1993**
8 மணி

★ எமது வழமையான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
★ கணித, விஞ்ஞான பாடங்கள் வாரத்தில் 4மணித் தியாலம் நடைபெறும்.

(சி-43·9)

---

யுத்தத்தை..
1ஆம் பக்கத் தொடர்ச்சி
ராம் திகதி கொழும்பில் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளார்.
மன்னார் மறை மாவட்ட மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள், இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு மற்றும் யுத்தத்தின் பாதிப்புகள் பற்றிய விவரங்கள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அவர் ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளார்.

(அ-5)

---

## விலங்கியல்

R. ஈஸ்வரதாசன்
B Sc (Cey) Dip. In Ed.

Revision
&
Paper Class

ஆரம்பம்: 02-02-93
3 00P. m.

**Personal**
**New Science Centre**
**Elilakam Front Lane, Jaffna.**

(சி/4327)

---

## நியூ மற்ஸ் அக்கடமி

வானவில் முன்பாக,
யாழ்.ஆரியகுளம் சந்தி

92 A/L பரீட்சையில்
பௌதீகவியலில்
முழுமைச்
சித்தியைப் பெறாத
மாணவர்களுக்குரிய

**DAY CLASSES**

**A/L**

**PHYSICS**

**சங்கர்**

மீட்டல் வினா-விடை
செவ், வியா 8 -
செவ, வியா 9 - 0

ஆரம்பம்:
**02 - 02 - 93**
8-00 A. M.

[சி/4328]

---

யாழ். கந்தர்மடம் அரசடி வீதி

அருள்மிகு செல்வ நாகபூஷணி அம்பாள் கோவில்

நூதனப் பிரதிஷ்டா

## மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கிரியாரம்பம்: தைத்திங்கள் 19ஆம் நாள் (01 - 02 - 1993)
திங்கள் இரவு 09-36 மணி

எண்ணெய்க் காப்பு: 02 - 02 - 1993 செவ்வாய்
நண்பகல் 12-00மணிமுதல் பிற்பகல்4-00 மணிவரை

மகாகும்பாபிஷேகம்: தைத்திங்கள் 21ஆம் நாள் (03 - 02 - 1993)
புதன்கிழமை முற்பகல் 09-36 மணி முதல் 10-.8 மணி வரையுள்ள மீனலக்ன சுபவேளை.

மகா கும்பாபிஷேக பிரதமகுரு: ''ஆகமப்பிரவீணா''
சிவஸ்ரீ கைலை வாமதேவக்குருக்கள் (நயினை)

சர்வ சாதகம்: சிவஸ்ரீ இ. கமலநாத சர்மா (புங்குடுதீவு)

குறிப்பு: மகா கும்பாபிஷேகம் அடியார்களின் பொது உபயமாக நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

அடியார்கள் அனைவரும் அன்னையைத் தரிசித்து அருள் பெற்றுய்யவும்,

இங்ஙனம்:
செ. குகநாதன் (ஆலய அறங்காவலர்)
செ. உதயசூரியன் (தேவி உபாசகா)

அரசடிவீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

24744)

---

இளங்கலைஞர் மன்ற கலாமண்டப

## திறப்பு விழாவும்

"ராக பாவம்"

**நிதியுதவி நிகழ்ச்சியும்**

இடம்:- மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்:- 06 - 02 - 1993 — 08 - 02 - 1993

நுழைவுச் சீட்டு:-
நாள் ஒன்றுக்கு: 500/-, 250/-

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்.

(சி-3920)

---

உ

## திருமண அழைப்பு

நிகழும் ஆங்கிரச வருஷம் தைத்திங்கள் 22ஆம் நாள் (1993-02-04) வியாழக்கிழமை இரவு 8-53 முதல் இரவு 10 40 வரையிலுள்ள
★ சுபமுகூர்த்த வேளையில் ★

| | |
|---|---|
| எங்கள் சிரேஷ்ட புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**தபானந்தன்**<br>(ஆசிரியர், யா/கோண்டாவில் சி சி த க பாடசாலை)<br>அவர்களுக்கும் | எனது கனிஷ்ட புத்திரி<br>திருநிறை செல்வி<br>**சந்திரலோசனி**<br>(சாந்தி)<br>அவர்களுக்கும் |

இணுவில் சிவகாமி அம்பாள் ஆலயத்தில் மங்கல நாண்பூணல் இனிது நிகழ விருப்பதால் உறவினர்களும், நண்பர்களும் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. சி. இராமநாதன்,
திருமதி இ. சிவபாக்கியம்.

செ. சோதிப்பெருமாள்,
இளைப்பாறிய அதிபரும்,
சமாதான நீதிபதியும்

அழைப்பாளர்கள்:

திரு. சி துரைராசா,
திரு பொ பாலசுப்பிரமணியம்
திருமதி பா. சுசிலாதேவி,
திரு இ கருணானந்தன் [பிரான்ஸ்].

திரு. ச. சதானந்தன் (லண்டன்)
திருமதி ச மீனலோசனி,
செல்வி ச. யாழினி,
திரு. சோ ஸ்ரீஸ்கந்தராசா (இராஜன்) (லண்டன்],
திருமதி ஸ்ரீ. சுகந்தமலர் [லண்டன்].

''ஆனந்த வாசம்'',
மஞ்சத்தடி இணுவில்.

''சரஸ்வதி மகால்'',
இணுவில்.

[இரு வீட்டாரினதும் அழைப்பு]

[சி-4392]

---

## திருமண அழைப்பு

காலம்: ஆங்கீரச தைத்திங்கள் 21ஆம் திகதி (03 02-1993) புதன்கிழமை காலை 9-00 — 10-35 வரையுள்ள சுபவேளை.

இடம்: பரராஜசேகரப் பிள்ளையார் கோவில், இணுவில்.

மணமகன்:
அளவையூர் லயஞான குபேரபூபதி
திரு. V. தெட்சணாமூர்த்தி தம்பதிகளின் தவப்புதல்வன்
**திருநிறை செல்வன் T. உதயசங்கர் அவர்களுக்கும்**

மணமகள்:
அளவையூர் திரு. குமாரசாமி தம்பதிகளின் தவப்புதல்வி
**திருநிறை செல்வி ரஞ்சனா அவர்களுக்கும்**

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் அனைத்துத் தமிழீழ மக்களும் சுற்றஞ் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தி ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



தவில்மேதை தெட்சணாமூர்த்தி

★ மணமகன் இல்ல வரவேற்பு:
மணவிழா நிறைவைத் தொடர்ந்து இணுவில் மத்திய கல்லூரிக்கு அருகில் 3 தினங்கள் - மணமகன் இல்லத்தில்.

★ மணமகள் இல்ல வரவேற்பு:
சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணி.

(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)

அன்புடன்

மணமகனுக்காக,
ஐ. கணேசன் தம்பதியர்
யார்க்கரு, கரவெட்டி.

மணமகளுக்காக,
திரு. குமாரசாமி தம்பதியர்
இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

**A/L-92** பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு

**DAY CLASSES**

ஆரம்பம்: **02-02-1993** செவ்வாய் காலை 8-00 மணி

★ எமது ஆசிரியர் குழு ★

| | | |
|---|---|---|
| Physics | ... | திரு. S. கணேசன் |
| Chemistry | ... | திரு. S. சண்முகசுந்தரம் (சண்) |
| Botany | ... | திரு. V.S. குணசீலன் |
| Zoology | ... | திரு S. ஸ்ரீகரன் |
| Pure/Applied Maths | ... | திரு P. வெக்டர்-வேலாயுதம் |

குறிப்பு:

★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

★ மாணவர் தொகை 20 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதால் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும். (சி-4397)


தொல்புரம் பகுதியில்

# மேற்கட்டு உரவகைக்கு தட்டுப்பாடு நிலவுகிறது

அராலி, பெப் 1

தொல்புரம் பகுதியில் விவசாயிகளுக்குத் தேவையான மேற்கட்டு உரத்திற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் காலபோகத்தின் ஆரம்பத்தில் தொல்புரம் கமநல சேவை நிலைய உரக் களஞ்சியத்தில் பெருமளவு அமோனியம் சல்பேற்று உரம் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது

ஆனால் அக்காலப் பகுதியில் அந்த நிலைய பத்திறம் காரணமாக விவசாயிகள் உரப் பசளைகளைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டாததனால் இக்களஞ்சியத்திலிருந்த உரவகைகள் பாதுகாப்புக்க நிவேறு பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. இதன் காரணமாகவே தற்போது உரத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தனியாரிடமும் உர இருப்பு முடிவடைந்துள்ள நிலையில் இப்பகுதி விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

தொல்புரம் கமநல சேவை நிலைய உரக் களஞ்சியத்திலுள்ள சொற்ப உரமும் உறளைக்கிழங்கு செய்கையாளர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் - ஒரு சில தினங்களில் களஞ்சியத்திற்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் உரப்பசளை விவசாயிகளுக்குப் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படும் என்றும் நிலைய அதிகாரி ஒருவர் சொன்னார். (த-12)

## சேவை நலம் பாராட்டு

வேலணைக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.சி. புலேந்திரனின் சேவை நலம் பாராட்டு விழா எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

## சகல பனை, தென்னை

தொழில் வல்லுனர்களுக்குமான

## முக்கிய அறிவித்தல்

பனை, தென்னை ஆகியவற்றில் இருந்து கள், பதநீர் சீவுபவர்கள் யாவரும் அந்தந்தப் பகுதி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஆகவே நீங்கள் உங்கள் பகுதிகளில் உள்ள மேற்படி சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் சங்கங்களின் அனுமதியைப் பெற்று, தொழில் புரியும் மரங்களுக்கு சங்கங்களால் இலக்கமிட்டுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அனுமதியற்ற, இலக்கமிடப்படாத மரங்களிலிருந்து கள், பதநீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால், அந்தந்தச் சங்கங்களால் மரங்களின் பாளைகள் வெட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கவனத்திற் கொண்டு தங்களுக்கு ஏற்படக்கூடிய தொழில் நட்டங்களை தவிர்த்துக்கொள்ளும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**வடமராட்சிக் கொத்தணி**

01. கட்டைவேலி தெ. ப. பொ. கூ. சங்கம்
02. பருத்தித்துறை ,,
03 அச்சுவேலி ,,

அறிவிப்போர்:

வடமாகாண தெங்கு பனம்பொருள் கூ. சங்கங்களின் சமாசம்.

(சி/4318)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் தளிராக: | மனங்களிலே நினைவாக: |
|---|---|
| 10 — 06 — 1949 | 02 — 01 — 1993 |

திருமதி


**அன்னபூரணம் சிவலிங்கம்**

முரசு மோட்டையைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சிவலிங்கத்தில் அன்பு மனைவியும், உதயகுமார் (சுவிஸ்), சந்திரகுமார் (சவூதி அரேபியா), சூரியகுமார், ஜெயகுமார் (மல்லாகம் மகா வித்தியாலய, மாணவர்) ஆகியோரின் அன்புத்தாயாருமான திருமதி அன்னபூரணம் சிவலிங்கம் (ராசாத்தி) 02-01-93 கிளாலிக் கடலில் கடற்படை அரக்கர்களினால் அகால மரணமடைந்தார். அவரின் ஆத்மா சாந்தியடைய இன்று 01-02 93 எமது இல்லத்தில் நடைபெறவுள்ள பிரார்த்தனைகளில் உற்றார், உறவினர்கள், நண்பர்களைக் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

கணவன்; செ. சிவலிங்கம்,
பிள்ளைகள், உறவினர்கள்.

ஏழாலை மேற்கு. (5765)

# 31ஆம் நாள் நினைவேடும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் செல்லையா சுப்பிரமணியம்**

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

| அன்னையின் மடியில்: | ஆழியின் மடியில்: |
|---|---|
| 03 - 03 - 1928 | 02 01 - 1993 |

தந்தையே எங்கள் தகைசான்ற தத்துவமே
சிந்தை, கவர்ந்து நின்ற தெய்வமே - மந்தைகளால்
அலைகடலாம் கிளாலியிலே ஆருயிரே அணைந்தாயோ
நிலை குலைந்தோம் ஐயயோ நாம்!

★ ★ ★

சந்ததமும் சதியாலே சாகின்ற தமிழரது
அந்தரமாம் வரலாற்றில் நீயிணைந்தாய் - விந்தையல்ல
கலங்கியழும் கண்களெல்லாம் கருவிகளாய் அனல் கக்கும்
நலம் கொழிக்கும் தமிழீழம் பார்!

02 - 01 - 1993 சனிக்கிழமை அன்று கிளாலிக் கடலில் அகால மரணமடைந்த. எமது அருமை அப்பா திரு. செல்லையா சுப்பிரமணியம் அவர்களின் வீட்டுக் கிருத்திய வைபவம் இன்று (01 - 02 - 1993) திங்கட்கிழமை அமரரின் இல்லத்தில் 11 மணியளவில் நடைபெறும். அத்தருணம், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் சமுகம் தந்து, அமரரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறும், தொடர்ந்து மதிய போசன வைபவத்தில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்!

(இவரோடு கிளாலிக் கடலில் காவியமான எம் தமிழர் அனைவருக்கும் எம் அஞ்சலிகள்)

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

கண்டி வீதி, தொடிகாமம். (24244)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பூச்சி அகற்றப்பட்ட நல்ல இன சுறுப்பு, ''வெள்ளை பொமனேரியன்'' நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தா. நவரெத்தினம் 14, விதானை ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (24720)

அழகிய அமெரிக்கன் ஸ்டிக்கேர்ஸ் (Strickers) மொத்தமாகவோ, சில்லறையாகவோ விற்பனைக்கு உண்டு. தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. சத்தி, 387A, கோவில் வீதி, நல்லூர். (சங்கிலியன் வீதிக்கு முன்னால்). (24721)

RX-F2 ஸ்டீரியோ, கசட் றேடியோ விற்பனைக்கு. தொடர்பு: 49, பலாலி வீதி, கந்தர்மடம். (5766)

## மலிவு விற்பனை

திருவள்ளுவர் நாட்காட்டி மற்றும் 3 அளவுகளில் படக் கலண்டர்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். 48 மணி நேரத்தில் தங்கள் விலாசம் பதிப்பித்துக்கொடுக்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம்- புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (24711)

## மணமக்கள் தேவை

இந்து, 7இல் செவ்வாய், குற்றமுள்ள 32 வயது தொழில்நுட்ப வியலாளருக்கும், 28 வயது சகோதரி ஆசிரியைக்கும் மணமக்கள் தேவை. இல 489, C/o பா உதயன், யாழ்ப்பாணம். (24705)

## தவறிவிட்டது

எனது மோட்டார் சைக்கிள் அத்தாட்சிப் புத்தகம் 27 - 01 - 1993 பிற்பகல் 2 30 மணியளவில் புதிய செம்மணி றோட், வேளா தோப்புக்கு இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் சசி கூல்பார், கல்வியங்காடு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (24706)

## குரு வக்கிர சஞ்சாரம்

29-01-93 முதல் வியாழனின் (பின்னோக்கி) வக்கிர சஞ்சார பலன்களும், புத்தாண்டுப் பலன்களும் ரூ 8/- எங்கும் கிடைக்கும். பாடசாலைப் புத்தகங்கள், சஞ்சிகைகளுக்கு கிருஷ்ணசாமி புத்தகசாலை, யாழ்ப்பாணம். நூலாசிரியர்: சத்தியதாஸன். (24731)

## வாடகைக்கு உண்டு

கந்தர்மடத்தடியில் சகல வசதியுடன் கூடிய வீட்டின் ஒருபகுதி சிறிய குடும்பத்திற்கு உண்டு. தொடர்பு: 78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (5767)

# உரும்பராயில் வெற்றிலைச் செய்கை

உரும்பராய், பெப். 1

உரும்பராய் பகுதியில் பரீட்சார்த்தமான முறையில் வெற்றிலைச் செய்கையை மேற்கொள்ளும் முயற்சியில் இப்பகுதி விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். எனினும் இதற்குத் தேவைப்படும் வெற்றிலை நாற்றுக்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலி வடக்கில் மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து வெற்றிலைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (த-154)

# பதவி வெற்றிடம்

திருநெல்வேலி டயா எலக்ரோனிக்ஸ் கொம்பிளெக்ஸ் நிறுவனத்தில்

★ பெண் காசாளர் ★ விகிதர்

பதவிகளுக்குப் புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். கல்வித் தராதரம் ஜி. சீ. ஈ. சா/தரம் வரை எதிர்பார்க்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் தயாரித்து 02-02-1993க்கு முன் நேரில் சமுகம் தரவும்.

**டயா எலக்ரோனிக்ஸ் கொம்பிளெக்ஸ்,**
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
[24741]

# விக்னா கல்வி நிறுவனம்

52 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

புவியியல்: திரு. குணராசா

**93 A/L** Sat., Sun. 8-00 — 9-00; செவ்., வியா. 4-30 — 6-00

**94 A/L** Sat., Sun. 7-00 8-00

அனுமதிகளுக்கு முந்துங்கள்

[சி 4394]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 16 — 05 — 1951

மறைவு: 02 — 01 — 1993

அமரர்

## சதாசிவம் பாலசுப்பிரமணியம் (துரை)

(சரஸ்வதி பேக்கரி உரிமையாளர், கொடிகாமம்)

கிளாலியில் உறங்கினை
கிழவர் செய்கையால்
முழுமதி யெனவரும்
முதல்வனே மடிந்தனை
கொடுமைகள் முடியும்
கொடியது உயரும்
அதுவரை அமைதி கொள்
அன்புடன் நினைக்கிறோம்.

மனைவி, மக்கள்.

சரஸ்வதி இல்லம்,
கொடிகாமம்.
(24723)

# கலை, வர்த்தகக் கல்லூரி C.C.A.

வெலிங்டன் சந்திக்கு அருகில்,
யாழ்ப்பாணம்.

## DAY CLASSES

### துரித மீட்டல் வினா-விடை

AL - 92 பரீட்சை முடிவு கிடைத்த பாடசாலை செல்லாத மாணவர்களுக்கான

### பகல் நேர வகுப்புகள்

ஆரம்பம்: 02 — 02 — 1993

எமது வழமையான ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| பொருளியல் | ... திரு. உதயன் |
| கணக்கியல் | ... திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | ... திரு. குகன் |
| அளவையியல் | ... திரு. சயந்தன் |
| இந்துநாகரிகம் | ... திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ் | ... திரு. தங்கராசா |
| புவியியல் | ... திரு. வேலாயுதபிள்ளை |
| அரசியல் | ... திரு. பஞ்சாட்சரம் |

குறிப்பு:

★ செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு நான்கு நாட்கள் வகுப்புகள் நடைபெறும்.

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்கூட்டியே அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

- நிர்வாகி.

(சி-4368)

# ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 05 — 04 — 1982

இறைவன் அடியில்: 12 — 02 — 1992

## செல்வி வத்சலா பஞ்சலிங்கம்

(யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவி)

திதி: 01 — 02 — 1993

''கனவுகள் கண்ணீரில் கரைகின்றன''

ஆண்டு ஒன்று போனது - எம்
மனம் அலைபோல் வேகுது
சாலம் செய்த கோலத்தால் எம்
கண்கள் ஒளியின்றித் தவிக்குது!

நீ வாழ்ந்த நாட்கள் கொஞ்சம்
நாம் வாழும் நாட்கள் இதை விஞ்சும்
களங்கமற்ற நெஞ்சம் இருந்தும்
கலக்கம் தான் கண்டமிச்சம்.

பிரிவால் துயருறும்:
அன்பு அப்பா, அம்மா,
அக்கா, தம்பி,
உற்றார், உறவினர்கள்.

42, பிரப்பம்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (24736)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 03 — 03 — 1928

மறைவு: 02 — 01 — 1993

## அமரர் செல்லையா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

கிளாலிக் கடலிலே அரக்கரின் கையினால்
கோரமாய்க் கொலையுண்ட செய்தி கேட்டு
நாமெல்லாம் இங்கு வாடி நிற்கின்றோம்
செவிப்புலனிழந்த எமக்கெல்லாம் தந்தையாய் நின்று
பல உதவிகளை நீர் செய்து வந்தீர்-ஐயா
இன்று நீர் எமைப்பிரிந்த போதிலும்
உம் நினைவுகள் எமைப்பிரியப் போவதில்லை
பாதகமாய் பாதகரால் நீர் இறந்த போதிலும்
நிச்சயமாய் மோட்சத்தில் இறைவனடி சேர்ந்திருப்பீர்.

உமது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்:

செவிப்புலன் வலுவற்றோர்
புனர்வாழ்வு நிறுவனம்,
செவிப்புலன் வலுவற்றோர்
நல்வாழ்வு, நற்பணி நிறுவனம்,
உறுப்பினர்கள்.

இல: 426, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். [24735]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## மறுபரிசீலனை அவசியம்

ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்களில் அறுபதாயிரம்பேரின் அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பங்களை அந்த நாடுகள் நிராகரித்துவிட்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இவ்வாறு ஈழத்தமிழர் மனுக்களை நிராகரித்த நாடுகளில் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி சுவிற்சர்லாந்து மற்றும் ஸ்கன்டிநேவிய நாடுகளும் அடங்கும்!

ஈழத் தமிழர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டது ஒன்றும் ஆச்சரியத்திற்கு உரியதல்ல; அதிர்ச்சிக்கு உரியதும் அல்ல. எதிர்பார்க்கப் பட்ட ஒன்றுதான். தமிழர் தாயகத்தில் யுத்தம் ஓயாத போதிலும், அவர்களுக்கு இங்கு உயிராபத்து உண்டெனத் தெரிந்து கொண்டும், மனிதநேயத்தைப் பிடுங்கி எறிந்து விட்டு என்று இந்தியா ஈழத்தமிழர்களைத் திருப்பி அனுப்பத் தொடங்கியதோ, ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரியவர்களுக்கும் அதே கதியே உண்டாகும் என்பது அன்றே தெரிந்தவிடயம் தான்.

ஐரோப்பிய நாடுகள் பலவும் அகதிகளுக்கு உதவும் சட்டங்களை அண்மைக் காலமாகத் திருத்தி, தஞ்சம் அளிப்பதை இறுக்கியும், கட்டுப்படுத்தியும் அடைத்தும் வருவதும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு இக்கதி உண்டாகும் என்பதை முன்னெச்சரிக்கையாகவே சமிக்ஞை காட்டின.

எனினும் மனித நேயம் குறித்தும், மனித உரிமைகளைப் பேணுவது குறித்தும் பெரிதாகப் பேசிவந்த ஐரோப்பிய நாடுகள் —

சகல அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டு, தனி மனிதனின் முதலாவது உரிமையான வாழ்வுரிமை பறிக்கப்பட்டு, உணவின்றி, மருந்தின்றி, அடிப்படை வசதிகள் எதுவுமே இன்றி, ஸ்ரீலங்கா அரசால் சாவின் எல்லைக்கு தள்ளப்பட்டும், இனப்படுகொலை தீவிரப்படுத்தப்பட்டும் ஈழத் தமிழர்கள் அழிந்து கொண்டிருப்பதை —

காண மறுப்பது கவலைக்குரியதாகும்.

ஈழத் தமிழர்கள் அரசியல் காரணங்களினாலேயே தமது நாடுகளின் மனித நேய உதவியை நாடிச் சென்றனர் என்பதை அவை உணர மறுப்பதும் மனநோவைத் தருவதாகும். ஈழத் தமிழர்கள் பொருளாதாரக் காரணங்களுக்காகவே வெளிநாடுகளில் தஞ்சம் கேட்கிறார்கள் என்ற ஸ்ரீலங்கா அரசின் திரிபுவாதப் பிரசாரத்தை அவை நம்புவது ஒவ்வாத செயலாகும்.

சம்பந்தப்பட்ட நாடுகளின் கொழும்பில் உள்ள தூதுவர்கள் ஒரு பக்கம் சாயாத கண்ணோடு உண்மையான தள நிலையைக் கண்டறிந்தால், அவை இந்த முடிவுக்கு வந்திருக்கமாட்டா. ஆகக் குறைந்தது யுத்தம் நிறுத்தப்பட்டு, தமிழ் மக்கள் மீது கொழும்பு அரசு இறுக்கியுள்ள பொருளாதார மற்றும் அத்தியாவசிய சேவைத் தடைகள் நீக்கப்பட்ட பின்னர் ஈழத் தமிழர்களைத் திருப்பி அனுப்பி இருக்கும்.

ஆகவே இந்நாடுகள், ஈழத் தமிழர்களின் தாயகத்தில் யுத்தத்தை நிறுத்துவதற்கு உருப்படியாக ஏதாவது செய்ய வேண்டும். அதற்கான அழுத்தங்களை கொழும்பு அரசு மீது போட்டாக வேண்டும். சமாதானத்தை உருவாக்கி அமைதியைக் கொண்டுவர உழைக்க வேண்டும். அதன் பின்னரே தமது நாடுகளில் உள்ள ஈழத் தமிழர்களை இங்கு திருப்பி அனுப்ப வேண்டுமெனக் கேட்கிறோம். அதன் பொருட்டுத் தமது இப்போதைய முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

# அங்கிலிக்கன் ஆயரின் அழைப்பு; மதத் தலைவர்கள் ஏற்றனர்

கொழும்பு, பெப். 1

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதில் சர்வமதங்களின் பிரமுகர்கள் கூட்டாக ஈடுபட வேண்டும் என்று அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ விடுத்த அழைப்புக்கு அனைத்து மதங்களின் தலைவர்களிடம் இருந்து சாதகமான வரவேற்பு கிடைத்துள்ளது.

இந்த அழைப்பு குறித்து மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகள் விரைவில் கூடி ஆராயவிருப்பதாகவும் பௌத்தபீடங்களுக்கு நெருங்கிய வட்டாரங்கள் கூறின. (த-எ)

# குடும்ப நல சேவையாளர்: யாழ்ப்பாணத்தில் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ். மாவட்ட குடும்ப நல சேவையாளர்களுக்கான வினைத்திறமை தகுதிகாண் தடைப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இப்பரீட்சை கொழும்பிலேயே நடைபெற்று வந்தது.

தற்போதைய சூழ்நிலையில் போக்குவரத்தில் உள்ள இடர்பாடுகளை கொழும்பிலுள்ள பொது சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் எடுத்துக் கூறப்பட்டதை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடும்பநல சேவையாளர்கள் மாதிரிப் படிவத்தில் உடனடியாக விண்ணப்பிக்குமாறும். மேலதிக விவரங்களை யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையில் அறிந்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் விரைவில் இங்கு வரவுள்ள குமணக் கப்பலில் எடுத்துவரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-162)

## செந்தில்நாதன் காலமானார்

கொழும்பு பெப் 1

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் அரசாங்க அதிபர் ஜெகா செந்தில்நாதன் கொழும்பில் காலமானார். [ -எ]

## விசர்நாய் கடிக்கு பலி!

யாழ்ப்பாணம், பெப். 1

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் விசர் நாய்க் கடிக்கு இலக்கான பெண் ஒருவர் தகுந்த சிகிச்சை பெற்றுக் கொள்ளத் தவறியதால் விசர் நாய்க் கடி நோய்க்காளாகி நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

கோப்பாயைச் சேர்ந்த சிவலிங்கம் ஜெயந்தி (வயது 38 என்பவரே மரணமானவராவார் [த-15]

## பொருள்களுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்தது.

பருத்தித்துறையில் தற்சமயம் பொருள்கள் இறக்கிக் கொண்டிருக்கும் 'குமாரி' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி நாளைக்குள் முடிவுற்றால் நாளை மறுதினம் தொடக்கம் "குமண" கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படும் என்றும் –

இல்லையேல் அதற்கு மறுதினமே பொருள்கள் இறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## அடர்ந்த...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும்—

படையினருக்கு பீரங்கிப் படையும் விமானப் படையும் உதவுகின்றன என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

இம் மூன்று மாவட்டங்களிலும் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் தற்போது அமுல் நடத்தப்பட்டு வருவது தெரிந்ததே. (ஒ-எ)

## மன்னார்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. அத்தியாவசியப் பொருள்கள் மட்டுமே கப்பிட்டிக்கு எடுத்து வரப்படுகின்றன—

மன்னார் பெருநிலப் பகுதியில் அடம்பன், உயிலங்குளம், நானாட்டான், வங்காலை ஆகிய பங்குப் பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. எனினும் அப்பகுதிகளுக்குச் சென்று வர முடிகிறது. ஆயினும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது. இப் பகுதிகளில் வழிபாட்டுத் தலங்கள் பல தரைமட்டமாக்கப்பட்டுள்ளன—என்றும் ஆயர் அதி வண. இராயப்பு ஜோசப் மன்னாரில் உள்ள நிலை குறித்த விவரிக்கையில் தெரிவித்தார். (ஓ-5)

## வன்னியில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிய வந்தது.

மணிப்புரம் பகுதியில் இருந்து கனரக வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் பம்பைமடு கிராம குடியிருப்புகளை ஆக்கிரமிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

படையினருக்கு உதவியாக ஹெலிகளும் போர் விமானங்களும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்காப் படையினரின் புதிய இராணுவ நடவடிக்கை குறித்து செய்தி ஏஜென்சிகள் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

### நீண்டகால தாக்குதல் திட்டம்

★ வடக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களைக் கைப்பற்ற நீண்டகாலமாகத் திட்டமிட்டு வரும் இராணுவம் அதன் ஓர் அம்சமாக சுமார் 3 ஆயிரம் படையினருடன் பாரிய தாக்குதல் நடவடிக்கையை வன்னி மாவட்டங்களில் ஆரம்பித்துள்ளது.

★ குறிப்பாக, வடமாகாணத்தின் வவுனியா மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சில கிலோ மீற்றர் தூரம் முன்னேற இராணுவம் முயன்றுள்ளது.

★ விடுதலைப் புலிகள் இன்னும் பதில் தாக்குதலை ஆரம்பிக்கவில்லை என்றும் இராணுவம் தெரிவித்துள்ளது.

★ தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ள தாக்குதல் ஒரு நீண்டகாலத் தாக்குதலாக அமையும் என்றும், இத்தாக்குதலில் ஹெலிக்கொப்டர்கள் உட்பட பலவித தளபாடங்களையும் போர் முறைகளையும் இராணுவம் கையாளுகிறது என்றும் — இராணுவத் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

### பெரிய ராணுவ நடவடிக்கை

★ கடந்த ஆகஸ்ட் மாதம் வடமாகாண இராணுவத் தளபதிகள் இழந்து, மனவலிமை குன்றியிருக்கும் இராணுவத்தினருக்குப் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தவென இராணுவம் தற்போது ஒரு பெரிய இராணுவ நடவடிக்கையில் இறங்கி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைக் கைப்பற்ற முயற்சிப்பதாக செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர். (ஓ-5)

# கீழைத்தேய மருத்துவத்தின் தனித்துவம் பேணுங்கள்

## பட்டமளிப்பு விழாவில் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 1

''சிறப்பு மிக்க கீழைத்தேய மருத்துவ முறைகளில் மேல்நாட்டு மருத்துவ முறைகளை சேர்த்துக் கொள்வதை அத்துறைசார்ந்த வைத்தியர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்தார் யாழ். பல்கலைக் கழக வர்த்தகத்துறைத் தலைவர் பேராசிரியர் திரு. என். பாலகிருஷ்ணன்.

வட இலங்கை ஹோமியோபதி சங்கமும், வட இலங்கை அக்குபஞ்சர் சங்கமும் மெடிசினா ஆல்ரனேட்டிவா சர்வதேச திறந்தவெளி மாற்றுமுறை மருத்துவ பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பட்டமளிப்பு விழாவில் பேராசிரியர் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். அங்கு தொடர்து உரையாற்றுகையில் —

''அக்குபஞ்சர், ஹோமியோபதி, சித்தவைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் போன்றவை மேல்நாட்டு மருத்துவ முறைகளுக்கு மாறாக உள்ளன. ஆனால் இம் மருத்துவ முறைகளை பின்பற்றும் வைத்தியர்கள் மேல்நாட்டு மருத்துவ முறைகள் சிலவற்றையும் அவற்றுடன் சேர்த்துக் கொள்ளுகின்றனர் என்று பொதுவாகக் குறை சொல்லப்படுகின்றது. இந்நிலை தவிர்க்கப்படவேண்டும். ஏனெனில் இவ்விரு மருத்துவ முறைகளுக்கும்அடிப்படையில் சித்தாந்த, கொள்கை வேறுபாடுகள் நிறைய உள்ளன.

ஆகவே இத்துறைசார்ந்த மாணவர்கள், வைத்தியர்கள் அதிகளவில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு விடுபட்டு போய் இருப்பவற்றை இவற்றோடு சேர்த்து கீழைத்தேய மருத்துவ முறைகளை உறுதியுடன் கட்டியெழுப்ப வேண்டும்'' என்றார்.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் ஹோமியோபதி அக்குபஞ்சர் பரீட்சைகளில் சித்தியடைந்த 38 மாணவர்களுக்கு பட்டங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. பேராசிரியர் என். பாலகிருஷ்ணனும், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் எஸ். பவானியும் பட்டங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினர்.

மேலும் இவ்விழாவில் திரு. அ. கிருஷ்ணசாமியின் வைத்திய சேவையைப் பாராட்டி ''வைத்திய பூபதி'' எனும் பட்டமும் வழங்கப்பட்டது.

## எம்.எல்.ஏ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தந்தரித்து இருந்த 7 நக்ஸலைட்டுகள் அவர்களை வழிமறித்து பிடித்துச் சென்றனர். பின்னர் இரண்டு அதிகாரிகளை மட்டும் தீவிரவாதிகள் விடுவித்தனர். எஞ்சியோரை விடுவிக்க வேண்டுமானால், பொலீஸாரின் காவலிலுள்ள 4 நக்ஸலைட்டுக்களை விடுவிக்க வேண்டும் என்றும் தீவிரவாதிகள் நிபந்தனை விதித்துள்ளனர் (த-எ)

## தொழில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரை, சான்றிதழ்களை உரிமையாளர்களை நேரடியாக வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

★ உடுவில் உ.அ.அ பிரிவு —நாளை செவ்வாய்க்கிழமை

★ சங்கானை உ. அ. அ. பிரிவு — நாளை மறுதினம் புதன்கிழமை.

★ தெல்லிப்பழை உ அ அ பிரிவு — நாளை மறுதினம் புதன்கிழமை. (ஓ)

## இம் மாதம் செயற்படும்

யாழ். மாவட்டத்தில் ஜேர்மன் அரசின் உதவியுடன் 11 கோடி 30 லட்சம் செலவில் ஆரம்பிக்கப்படவுள்ள புனரமைப்புத் திட்டம் இம்மாதம் தொடக்கம் செயற்படுத்தப் படவிருக்கிறது.

இடம் பெயர்ந்தோருக்கான குடிசை அமைத்தல், அகதி முகாம் புனரமைத்தல், போசாக்கு மற்றும் முகாம் சுகாதாரநிலை மேம்படுத்தல், உபகரணங்கள் வழங்கல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தவே இந்த உதவி வழங்கப்படவிருக்கிறது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மூலமாக இந்த திட்டம் செயற்படுத்தப் படவிருப்பதாகவும்—

இந்தத் திட்டத்துக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும்—

இம்மாதம் முதல் இத்திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் இணையப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். [உ-3]


## கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

மதிஒளி ச ச. நிலையத்தின் 2வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தமிழீழ எல்லைக்குட்பட்டோர் மட்டும் பங்குபற்றலாம்

பதிவு செய்யும் கடைசித் திகதி: 10 - 02 - 1993

பதிவு செய்ய: க. நடராசா
மதிஒளி ச. ச. நிலையம்.
கலையரசு வீதி, நவாலி தெற்கு,
மானிப்பாய்.

அவர்களுடன் தொடர்பு கொள்க

இ. கிலர்
விளையாட்டுக் குழுத் தலைவர்

(5768)

## பாராட்டுகிறோம்

கடந்த 08-01-1993 திகதியன்று எனது பிள்ளையின் ஒரு பவுண் நிறையுள்ள கைச்சங்கிலி வழியில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்து எம்மிடம் ஒப்படைத்த சுன்னாகம் - கந்தரோடை கணக்கர் வளவைச் சேர்ந்தவரும், யாழ் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுபவருமான திரு. சண்முகம் ரவிக்குமார் அவர்களின் நேர்மையுள்ளத்தை நன்றியுடன் பாராட்டுகிறோம்.

தர்மலிங்கம் தனபாலன்,
(மருந்துக கலவையாளர்)

காலையடி,
பண்டத்தரிப்பு.

(24927)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்வி கமலநாயகி பாலசிங்கம்
(காரைநகர்)

காரைநகர் கதிர்காமசாமி கோவிலடியைச் சேர்ந்தவரும், தற்போது 19, ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய செல்வி கமலநாயகி பாலசிங்கம் (சுருக்கெழுத்தளார், நீதிமன்றம், ஊர்காவற்றுறை கொழும்பில் 30-1-93இல் காலமானார்.

இவர் திரு. திருமதி பாலசிங்கத்தின் அன்பு மகளும் செல்வநாயகி, அம்பிகாதேவி, ஆனந்தகுமார், நடனகுமார், வசந்தநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், துரைராஜசிங்கத்தின் மைத்துனியும், சுவாதி, பாரதி ஆகியோரின் சித்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 31-1-93 அன்று பொரளை கனத்தை மயானதில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
A. K. பாலசிங்கம்

19, ஐயனார் கோவில் வீதி.
யாழ்ப்பாணம்.
(24748)

## திருமதி ஆறுமுகம் சுந்தரம்
(வீரகத்தி)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஆறுமுகம் சுந்தரம் நேற்றுக் காலமானார். இவர் காலஞ் சென்ற ஆறுமுகம் (வீரகத்தி) அவர்களின் அன்பு மனைவியும், சிவரத்தினம், துரைராஜா, நடராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தையா, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சி. கனகம்மா, து. விருத்தாம்பாள், ந ஜெகசோதிமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (1-2-93) காலை 10 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
ஆ. நடராசா
(மகன்)

இல. 15, 4 ஆம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.
(24749)

## திருமதி இ. பூரணம்

திருமதி இ. பூரணம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் திரு. சே. வி இராசரத்தினத்தின் (முன்னை நாள் பொலீஸ் திணைக்கள முதலாம் தர எழுதுவினைஞர்) அன்பு மனைவியும், திருமதி அ. பூங்கொடி (ஆசிரியை, கணேஷவித்தியாசாலை, தையிட்டி), திருமதி அ. பூங்கோதை (ஆசிரியை, நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை), ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. பொ. அருந்தவநாதன் (விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை). திரு. சி. அமுதலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் நேற்று (31 - 1 - 1993) மாலை 5 00 மணிக்கு நடைபெற்றன. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
(24252) திரு பா அருந்தவநாதன்

## சின்னத்தம்பி சிறீரங்கம்
(மயிலங்கூடல்)

மயிலங்கூடல் சின்னத்தம்பி சிறீரங்கம் அவர்கள் நேற்றுக் காலை காலமாகிவிட்டார்கள்.

இறுதிக் கிரியைகள் அவர்கள் இப்போது இருக்கும் 25, மண்ல்தன்ற ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியை உடைய வீட்டில் நேற்று நண்பகல் நடைபெற்றன.

தகவல்:
சி. அப்புத்துரை
(மகன்)
(மயிலிட்டிக் கலைமகள் மகாவித்தியாலய முன்னைநாள் அதிபர்)

25, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(24750)

## தம்பிராசா வேதநாயகம்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட வரும், தற்போது மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட வருமான தம்பிராசா வேதநாயகம் 31-01-93 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற றெஜீனா லூர்து அவர்களின் அன்புக் கணவரும், இலங்கைநாயகம், இலங்கைநாயகி, நேசன், மோகன், இராசகுமாரி, வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்ரன் தாசியஸ், (பண்டத்தரிப்பு பட்டணசபை), மெற்றில்டா (ஓட்டகப்புலம்) ஆகியோரின் மாமனாரும், நீருஷா, நிறோச், வினோத், ஜெறி ஆகியோரின் பேரனும், செபஸ்ரியன் பூமணியின் (மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (01-02-93) பிற்பகல் 3 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
அன்ரன் தாசியஸ்
(மருமகன்)

முகுத்தன் வீதி,
மானிப்பாய்.
(24251)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 232 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01-02-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## வரவேற்பு விழா

யாழ்ப்பாணம், பெப் 1

மன்னார் மறை மாவட்ட ஆயர் வண. பிதா இராயப்பு யோசப் அவர்களுக்கு, நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு வரவேற்பு வைபவமும் கூட்டுப்பலியும் இடம்பெறும்.

★ ★ ★

யாழ். ஆயரின் அழைப்பை எற்று இங்கு வந்துள்ள மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி. வண. இராயப்பு யோசப்பை வரவேற்கும் நிகழ்ச்சி இம்மாதம் 7 ஆம் திகதி மாலை 4.15 மணிக்கு யாழ். ஆசனக் கோவிலில் நடைபெறும்.

யாழ். ஆயர் இல்ல வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. ஆயரின் விஜயத்தை முன்னிட்டு முன்னர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி நிரலின்படி வரவேற்பு வைபவம் எதிர்வரும் 9 ஆம் திகதி என இருந்தது.

எதிர்வரும் 8ஆம் திகதி ஆயர் இங்கிருந்து புறப்படவிருப்பதால் வரவேற்பு நிகழ்ச்சி 7 ஆம் திகதி மாலை நடைபெற ஏற்பாடாகி உள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-5)

## இன்றைய ஆட்டங்கள்

அரியாலை, பெப். 1

யாழ் கரபந்தாட்ட சம்மேளனம், யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் கரபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று மாலை 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு;

★ மட்டுவில் ம. ம. வி. எதிர் கனகரத்தினம் ம. ம. வி.

★ ஹாட்லிக் கல்லூரி எதிர் சென் ஜோசப் கல்லூரி.

★ யாழ். இந்துக் கல்லூரி எதிர் யாழ் பரியோவான் கல்லூரி. (த 17)

## ரயில்வே ஊழியரின் ஓய்வூதிய வவுச்சர்

யாழ்ப்பாணம், பெப். 1

ரயில்வே சேவையில் கடமையாற்றி தற்போது ஓய்வூதியம் பெறுபவர்களுக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள், இந்த மாதத்தில் இருந்து அவரவர் விலாசத்திற்கு யாழ். செயலகத்தின் ஊடாக அனுப்பி வைக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் இவ் வவுச்சர்கள் கொழும்பில் இருந்து நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டதனால் அவற்றை உரிய காலத்தில் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி இருந்தது.

வடமாகாண ஓய்வூதியர் சேமநல சங்கத்தின் கோரிக்கையின் பெயரில் யாழ் அரச அதிபர் கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியதன் பயனாக, மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த)

## 5 மத்திய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய ஐந்து பாடசாலைகளுக்கே இவ் வசதிகள் வழங்கப்படவிருக்கின்றன.

o இந்த வித்தியாலயங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர், நலன் விரும்பிகள் இணைந்து பாடசாலைகளுக்குத் தேவையான வசதிகளை மதிப்பீடு செய்து உதவி வழங்க வேண்டும்.

o இந்த வித்தியாலயங்களுக்கு அரசின் உதவிகள் கூடுதலாக வழங்கப்படும்.

o இவற்றில் கல்வி பயிலும் மாணவர்கள் தேசிய பாடசாலைகளில் அனுமதிபெற முடியாது. (இ-3)

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
## அதிர்ஷ்டலாபச் சீட்டு

மைதான விரிவாக்கம் — 2 ஆம் கட்டம்

பரிசு பெற்ற சீட்டு இலக்கங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1) | 1 ஆம் பரிசு: | இல. 38293 | — ரூபா 10,000 |
| 2 | 2 ஆம் பரிசு: | இல. 19342 | — ரூபா 7,500 |
| 3) | 3 ஆம் பரிசு: | இல. 38768 | — ரூபா 5,000 |

10 ஆறுதல் பரிசுகள் — தலா ரூபா 1000/ வீதம்

| | | | |
|---|---|---|---|
| 1) | 16296 | 6) | 21855 |
| 2) | 10476 | 7) | 21881 |
| 3) | 08612 | 8) | 35230 |
| 4 | 05302 | 9) | 30549 |
| 5) | 17665 | 10) | 30508 |

பரிசளிப்பு — 06 - 02 - 93 — பிற்பகல் 3. 00 மணி

மேற்படி பரிசு பெற்ற பற்றுச் சீட்டுக்களை வைத்திருக்கும் அதிர்ஷ்டசாலிகள் 06—02 1993 அன்று கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். '' முழுநிலாநாள் அறிவியலரங்கு '' தினத்தில் தமது பரிசுச் சீட்டுக்களை சமர்ப்பித்து பரிசுகளைப் பெற்றுச்செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : எம்மால் விற்பனை செய்யப்பட்ட சகல அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களும் சீட்டிழுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டன என்பதை அறியத்தருகிறோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்:

ப. மா. சங்கம்,
யாழ் இந்துக் கல்லூரி.
(சி/4329)

# எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக் கல்லூரி அருகில்)

41/1, K. K. S வீதி, யாழ்ப்பாணம்.

## O/L DAY CLASS
பிரிவு — 1

கணிதம்: பாஸ்கரன்

விஞ்ஞானம்: இரா. செல்வவடிவேல், J. J. கொலின்ஸ்

சமூகக்கல்வி: K. S. முத்துலிங்கம்

தமிழ்—சமயம்: வேல்நம்பி

ஆங்கிலம்: R. சிவலிங்கம்

வர்த்தகம்: விக்கி

★ கணிதம் வாரத்தில் 6 மணி நேரமும் விஞ்ஞானம் வாரத்தில் 4 மணி நேரமும் நடைபெறும்.

**ஆரம்பம்: 02—02—93** செவ்வாய் 8.00 மணி

(24747)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
01 — 01 — 1921



துறக்கம்
02 — 01 — 1993

இறைபதமடைந்த

## திருமதி ஆறுமுகம் வள்ளியம்மை

உலகவழா யானாய் நீயே!
உண்மையு மானாய் நீயே! - நெற்றித்
திலகமு மானாய் நீயே! - இன்றுயாம்
தேம்பியழ தெய்வமாகிப் போனாயே!

121, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
(24745)

மக்கள், மருமக்கள்,
பேரப் பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org